**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 209/2023**

பெயர் : ரேவதி (PW1)

த/க/பெ. :

தேதி :19.03.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பிரதிவாதிகளின் எதிர் வழக்குரை விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று அவர்கள் கட்சி எடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு உரிமை உள்ளது. என் தாயாரின் சொத்தும் இதில் உள்ளது. என் தாயாருக்கு சொத்து உள்ளது என்றும் நான் இரும்புத்துறை மருமகன் என்ற விவரம் வழக்கில் சொல்லியுள்ளனே் அவ்வாறு சொல்ல விடல்லை வழக்கிற்கான பொய்யாக சொல்கிறனே் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதிகளின் கட்சியை மறுத்து எந்த விபரமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் எதிர் வழக்குரைக்கு நான் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குளத்திற்கு வடக்கு பக்கம் பிரதிவாதிகளின் தெரு வாசிகளின் பொது பயன்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. அந்த குளம் பிரதிவாதி தெருவாசிகளின் பொது குடிநீர் ஆதாரமாக உள்ளது என்றால் சரியல்ல. அந்த இடத்தை பிரதிவாதிகள் தெருவாசிகள் பொது நிகழ்ச்சி, கோவில் நிகழச்சி, குழந்தைகள் விளையாடுவதற்கு பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இடத்தை ஆக்கிரமிக்கும் நோக்கிலும் குளத்து நீரை மின்மோட்டார் மூலம் வெளியேற்றியும் இடையூறு செய்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஆக்கிரமிப்பு முயற்சியை பிரதிவாதிகள் தடுத்ததால் இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகள் பயன்படுது்துவதை இடையூறு செய்யும் வண்ணம் காவல் நிலையம் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பொது இடத்தை வேலி போட முயற்சித்ததால் பிரதிவாதிகள் தரங்கம்பாடி வட்டாட்சியரிடம் மனு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, நான் தான் மனு கொடுத்தேன். 10.01.2020 ல் பிரதிவாதிகள் கொடுது்த மனுவில் பேரிலவ் சமாதானம் கூட்டம் நடைபெற்றது என்றால் நான் தான் மனு கொடுத்தேன். சொத்தின் எனக்கு உரிமை இல்லாததால் நான் சொத்தில் வரக்கூடாது என்று முடிவெடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சொத்தில் அவர்கள் அத்துமீற வரக்கூடாதுள ன்று முடிவானது. நான் சொத்தை ஆக்கிரமிக்க முயன்றதால் காட்டுச்சேரி ஊராட்சி மன்றத்தில் 26.01.2020 தீர்மானம் நிறைவேற்றபட்டது என்றால் சரியல்ல. தாவா குளத்திற்கு வடக்கே எனக்கு உரிமை மற்றும் அனுபவம் இல்லை என்றாலும் என்னுடைய வேலி அடைப்பு இல்லை என்றாலும் சரியல்ல. வேலி அடைப்பே அவர்கள் தடுத்ததால் நான் புகார் கொடுதுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லைஎன்றாலும் சரியல்ல. அவ்வாறு இருந்து இருந்தால் வழக்குரையில் தாக்கல்

செய்திருப்பேன் என்றால் சரியல்ல. சொத்துக்கள் குறித்து என் மாமானார் பிரதிவாதிகள் முன்னோர் மீது சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு போட்டார் என்றால் சரிதான். அந்த் வழக்கு என் மாமானருக்கு எதிராக தீர்ப்பானது என்றால் சரியல்ல. அது எங்களுக்கு பாதகமானது தீர்ப்பு என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு முன்தீரப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்த ஆவணம் கோவில் திருவிழாவை சொத்தின் எனது உரிமையாக காட்டக்கூடியஆவணம் என்றால் சரியல்ல. உபயோக தொகை ரசீதுகள் எங்கள் உபயோகத்திற்கான ரசீதுகள் தவிர சொத்தின் உரிமைக்கான ஆவணம் என்றால் சரியல்ல. அந்த ஆகூண்ங்களால் எனக்கு எந்த அனுகூலமும் கிடைக்கக்கூடியதுஎ ன்றால் சரியல்ல. வா,சா,ஆ 5,6 என் மானாருக்கு பாகமாக கிடைத்த பகுதி உடடையது என்றால் எங்கள் சொத்தின் அனுபவம் என் மாமானார் வசம் தான் உள்ளது. என் மாகனாரின் வாரிசுகள் தான் வழக்கு நடத்த இயலும் என்பதாலும் எனக்கு வழக்கு நடத்த உரிமையில்லை என்றாலும் சரியல்ல. கொரோனா காலம் என்பதால் அவர்களால் வர இயலவிலலை என்பதால் நான் வழக்கு போட்டுள்ளேன். வா,சாஆ,23 ரசீதுகள் தொடர்ச்சியாக உள்ளது என்றால் தொடர்ச்சியாக வேலை செய்தார்கள். அதில் பார்ட்டி கையெழுத்து என் கையயெழுத்து இல்லை என்றால் அவர்கள் மட்டும் தான் கையெழுத்து போட்டார்கள். எனக்கு வேண்டப்பட்ட ஜேசிபி கம்பெனியில் ஆவணங்களை போலியாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. இடும்பத்துறை மனைவி லலிதா இரண்டாவது மனவைி உயிருடன் இருக்கிறார், முதல் மனைவி பக்கிரியம்மாள் . முதல் மனவைிக்கு இரண்டு மகன் இரண்டு மகள். அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள்,. இரண்டாதவது மனவைிக்கு ஒரே மகன் பக்கிரிசாமி. வழக்கு சொத்து இடும்பத்துரைக்கு உரியைமயானதாக இருந்தால் அவரது அனைத்து வாரிசுகளும் வழக்கு போட்டுயிருப்பார்கள் என்றாலும் சொத்தை அபகரிக்கும் நோக்கில் நான் மட்டும் வழக்கு போட்டுளேன் என்றால் வாரிசுகள் அனைவரும் வெளிநாட்டில் உள்ளார்கள். வழக்கு நடத்த அவர்கள் எழுத்து மூலமாக அனுமதி கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. குமாரையனுக்கு வாரிசு அவர் மனைவி ஒரு மகள். வீரப்பனுக்கு வாரிசு இல்லை. வீரப்பன் சாமி , குமரப்பசெட்டியார் ஆகியோருக்கு பாகமாக கிடைத்ததால் அவர்கள் வாரிசுகள் வழக்கில் அவசிய தரப்பினர் என்றால் அவர்கள் எங்களுக்கு எழுதி கொடுத்துவிட்டார்கள். அவசிய தரப்பினர் சேர்க்காததால் தள்ளுபடி செய்யக்கூயுடியது என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதி தெருவாசி பொது அனுபவத்தில் உள்ளதால் அவர்கள் மீது பிரதிநிதித்துவ முறையில் தான் நான் வழக்கு தாக்கல் செய்யதிருக்க வேண்டுமென்றால் சரியல்ல. வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.